Tamil scholar

**சுருக்கம்**

தமிழ் வளர்ச்சி – 2020–2021–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழறிஞர்களுக்கு திங்கள் தோறும் வழங்கப்படும் உதவித்தொகையினை ரூ.3,500/–லிருந்து ரூ.4,500/– ஆக உயர்த்தி வழங்குதல் – 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் இதற்கென தொடர் செலவினமாக ரூ.59,64,000/– கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்தல் – நடப்பு நிதியாண்டிற்கு ரூ.9,94,000/– கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.17

நாள் 01.02.2021
சார்வரி, தை – 19
திருவள்ளுவராண்டு 2052

**படிக்கப்பட்டவை:–**

1) அரசாணை (நிலை) எண்.72, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டு(தவ 2.2)த் துறை, நாள் 03.03.1988.
2) அரசாணை (நிலை) எண்.169, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.2)த் துறை, நாள் 21.08.2018.

**படிக்க:–**

3) 2020–2021–ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் அறிவிப்பு.
4) தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.2599/ தமிழ்–3/2020, நாள் 30.04.2020.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழறிஞர்களுக்கு உதவித்தொகையாக ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) வழங்கி ஆணையிடப்பட்டது. மேலும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை ரூ.3,000/–லிருந்து (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) ரூ.3,500/– (ரூபாய் மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

2) 2020–2021–ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில், தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை எண் 46–இன் போது மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு) அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது:-

**"தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூபாய் 3500/–லிருந்து ரூபாய் 4500/– ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 59 இலட்சத்து 64 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்"**

3) மேற்கண்ட அறிவிப்பு தொடர்பாக, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை தமிழக அரசு 1984–ஆம் ஆண்டில் தோற்றுவித்தது என்றும், தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபட்டு தனது சான்றாண்மையை வெளிப்படுத்திடும் வகையில் சிறை சென்றவர்களுக்குத் தமிழறிஞர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும், தமிழக அரசால் அமைக்கப்பெறுகின்ற உயர்நிலைக்குழு உதவித்தொகை பெறத்தக்க தமிழறிஞர்களைத் தெரிவு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்கிறது என்றும், அப்பரிந்துரையின் அடிப்படையில் அரசு ஆணை வெளியிடுகிறது என்றும், அவ்வரசாணையில் குறிப்பிடப்பெற்றுள்ள நாளிலிருந்து, இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவரும் தமிழறிஞர் என்ற முறையில் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை பெறுவர் என்றும், தமிழறிஞர் எவரேனும் இறந்துவிட்டால் அவரின் துணைவியார் (கணவன்/ மனைவி) இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து உதவித்தொகை பெறுவார் என்றும், அவ்வாறு இல்லாத நேர்வில் தமிழ்நாடு 1983–ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கான உதவித்தொகை வழங்குதல் – பல்வகை விதித்துறைகள் தமிழ்நாடு சட்டம் 23/1983–இன்படி தகுதியுடைய மரபுரிமையர்கள் இவ்வுதவித் தொகையைப் பெறுவர் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) தமிழறிஞர்களுக்கு உதவித்தொகையானது 14.04.1987 முதல் வழங்கப்படுகிறது என்றும், தற்போதுள்ள விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டும், தமிழறிஞர் மரபுரிமையர்களின் ஏழ்மை நிலையையும் அவர்கள் வயதின் முதிர்வினால் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்கவும் தற்போது வழங்கப்பட்டு வரும் தமிழறிஞர்கள் உதவித்தொகையை ரூ.3500/–லிருந்து (ரூபாய் மூன்றாயிரத்து ஐந்நூறு மட்டும்) ரூ4,500/– (ரூபாய் நான்காயிரத்து ஐநூறு மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்படலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5) மேலும், தற்போது தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போது 497 தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர்

என்றும், இவர்களுக்கு உயர்த்தப்பட்ட தொகை இவ்வாண்டு முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் இத்தொகையினை 2020–2021–ஆம் நிதியாண்டு முதல் வழங்க ஆவன செய்யுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேற்காணும் தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் 2020–2021–ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பினைச் செயற்படுத்தும் பொருட்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(i) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், தமிழறிஞர்களுக்கு தற்போது திங்கள்தோறும் வழங்கப்பட்டு வரும் உதவித்தொகையை 01.01.2021 முதல் ரூ.3,500/–லிருந்து (ரூபாய் மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) ரூ4,500/–ஆக (ரூபாய் நான்காயிரத்து ஐநூறு மட்டும்) உயர்த்தி வழங்கப்படுகிறது.

(ii) 2020–2021–ஆம் நிதியாண்டிற்கு 01.01.2021 முதல் 28.02.2021 வரை 2 திங்களுக்கு (497x1000x2) ரூ.9,94,000/–ஐ (ரூபாய் ஒன்பது இலட்சத்துத் தொண்ணூற்று நான்காயிரம் மட்டும்) கூடுதலாக நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii) 2021–2022–முதல் இதற்கென ஆண்டொன்றுக்குக் கூடுதல் தொடர் செலவினமாக (497x1000x12) ரூ.59,64,000/– (ரூபாய் ஐம்பத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரம் மட்டும்) கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

7) மேலே பத்தி 6(ii)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2075 – 00 பல்வகைப் பொதுவான பணிகள் – 104 தன்னிகரற்ற பணிகளுக்கான உதவித் தொகைகளும் வெகுமதிகளும் – மாநிலச் செலவினங்கள் – AF தமிழ் இலக்கியத்தையும் பண்பாட்டையும் பாதுகாத்து வளர்க்க சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்கு ஓய்வூதியம் – 327 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்"

IFHRMS (த.தொ.கு 2075 00 104 AF 32705)

OLD (த.தொ.கு2075 00 104 AF 2756)

8) மேலே பத்தி 6(ii)–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.9,94,000/–க்கு 2020–2021–ஆம் நிதியாண்டுக்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்நிதியொதுக்கம், செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6(ii)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 6(ii)–இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020–2021–ஆம் நிதியாண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்காக தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ(ம)செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9) இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.2831/ நிதி(தவ(ம)செ)/2021, நாள் 29.01.2021–இல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1565 (ஆயிரத்து ஐந்நூற்று அறுபத்தி ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–35.
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–9/18.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச்செயலர், சென்னை–9.
நிதி(தவ(ம)செ / வ.செ.பொ. I/II/ வ.வ. I)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்

02/2/2021